சந்தா விவரம்.

பஞ்சாயத்துக்களுக்கு வருஷத்துக்கு		ரூபாய் 2.
மற்றவர்களுக்கு	...	,, 3.
தனிப்பிரதி	...	அணா 4.

விளம்பர விகிதம்.

சஞ்சிகை மானேஜருக்கு எழுதித்தெரிந்து கொள்ளலாம்,

சென்னை மாகாணக் கூட்டுறவு யூனியன்,

ராயப்பேட்டை, சென்னை

TO LET.

உத்தம தோழன்.

மூத்திரசம்பந்தமான வியாதிகளால் அவதிப்பட்ட ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கு குணமென்னும் பாக்கியத்தைக் கொடுத்து பேரும் புகழும் பெற்ற உத்தம தோழன் யாதென்று உங்களுக்குத் தெரியுமா?

அதுவே எங்கள்

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

அஜீரணம், மலச்சிக்கல், நரம்புகளின் தளர்ச்சி, ஞாபகக் குறைவு, முதலிய வியாதிகளை சுரஸ்தமாகக் கண்டிக்கும்.

[32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூபா 1.]

இனம்! "போஜன விதி" இனம்!!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,

26, பிராட்வே, சென்னை.

18 DEC 1931

கிராமப் பஞ்சாயத்து.

மாகாண மாதாந்திரப் பத்திரிகை.

சம்புடம் II] 1931 ௵ அக்டோபர் [இலக்கம் 1.

நமது நோக்கம்.

இப்பிரதியிலிருந்து நமது இரண்டாவது வருஷம் ஆரம்பமாகிறது. ஸ்தல ஸ்தாபனச் சட்டம் அமுலுக்கு வந்தது முதல் இப்பத்திரிகைத் தோன்றி வந்திருக்கிறது. பஞ்சாயத்து ரிஜிஸ்திரார் ஜெனரல் அவர்களால் பிரசுரிக்கப்பட்டு வந்த "கிராமப் பஞ்சாயத்து" என்னும் பிரசுரம் நின்று போய் விட்டதினால், அதற்குப் பிரதியாக இது தோன்றி யிருக்கிறது. சென்ற பன்னிரண்டு மாதங்களாக பஞ்சாயத்துக்கள் கிராம ஆட்சி அபி விருத்தியால் சிரத்தைக் கொண்டிருப்பவர்களுக்கு நம்மாலியன்ற உதவி புரிந்து வந்திருக்கிறோம். எனினும், இந்த ஒரு வருஷமாக உழைத்ததினால் ஏற்பட்ட பயன் ஒன்றும் அதிகம் காணப்படவில்லை. பஞ்சாயத்துக்கள் அமைய முடியாமலிருந்ததே இதற்குக் காரணமாகும். பஞ்சாயத்துக்கள் தேர்தல் மூலம் தான் ஏற்படவேண்டுமென்பது புதிய சட்டத்தின் உத் தேசம் என்பதை இப்பத்திரிகையில் நாம் ஏற்கனவே விரிவுப்படுத்தி யிருக்கிறோம். தாலுக்கா போர்டுகளின் வாக்காளர் ஜாப்தாவையொட்டி யே பஞ்சாயத்துப் போர்டுகளின் வாக்காளர் ஜாப்தாவும் தயாராகவேண்டி யிருக்கிறது. தாலுக்கா போர்டுகளின் வோட்டர் ஜாப்தாக்கள் தயாரிக் கப்பட்டு வருகின்றன. இவை பூர்த்தியாக இன்னும் சில மாதங்களாகும். பஞ்சாயத்து ரிஜிஸ்திரார் ஜெனரல் ஸ்தானத்தை எடுத்து விட்டதினால், நிர்வாகச் சம்பந்தமான சங்கடங்கள் கிளம்பிவிட்டன. புதிய மந்திரிகள் வந்து பழைய ரிஜிஸ்திரார் ஜெனரலுக்குப் பதிலாக அவருக்கிருந்த அதிகா ரங்களெல்லாம் ஸ்தலஸ்தாபன இன்ஸ்பெக்டருக்குக் கொடுத்ததுவரைக்கும் பழைய பஞ்சாயத்துக்கள் கூட சிறிது அவஸ்தைப்பட நேர்ந்தது. நாட் டில் அபிவிருத்திக்குத் தடையாகவிருந்து வரும் பணமுடை பஞ்சாயத்து இயக்கத்தையும் பாதித்திருக்கிறது.

ஆகையினால், புதிய சட்டத்திற்கு முன்னாலிருந்த பழைய பஞ்சாயத் துக்களின் ஆதரவை மாத்திரம் நாம் எதிர்ப்பார்க்கவேண்டி யிருந்தது. பழைய பஞ்சாயத்துக்கள் அநேகமும் வேலை செய்யவில்லை யென்பதும்

31/1-21,
13-1 42

தெரிந்த விஷயமே. தப்பித்தவறிவேலை நடத்திவரும் பஞ்சாயத்துக்களும் ரிஜிஸ்திரார் ஜெனரல் அவர்களின் ரிப்போர்ட்டில் கூறப்பட்டுள்ளவாறு, "பள்ளிக்கூடக் கமிட்டி" களாக மாத்திரமே யிருந்திருக்கின்றன. இவ்வளவு சங்கடமும் சிரத்தைக்குறைவும் பொருந்திய இந்நிலைமையில் நம்மை விசேஷமாக ஆதரித்து வந்திருக்கும் நண்பர்களுக்கு எம்மனமார்ந்த வந்தனத்தைக் கூறுகிறோம். கிராம வாசிகளுக்கு உதவி புரிய நாங்கள் செய்து வந்த பிரயத்தனம் பலிதமாகுமாறு உதவிபுரிந்த கூட்டுறவு இலாகா அதிகாரிகளுக்கும், முக்கியமாக அந்த இலாகா ரிஜிஸ்திரார் மிஸ்டர் டி. என், ஸ்டிராதி ஐ, ஸி. எஸ். அவர்களுக்கும் ஸ்ரீமான் தெய்வசிகாமணி மூதலியாரவர்களுக்கும் நாம் நன்றி செலுத்துகிறோம். ஆனால், இப்பத்திரிகைத் தோன்றுவதற்கான நல்ல யோசனைகள் கூறிய ஸ்தல ஸ்தாபன இன்ஸ்பெக்டருக்கும் நமக்கும் திருப்திகரமான சப்பந்தங்களிருந்தும், மாகாணக் கவர்ன்மெண்டு உபயோககரமான உதவி புரிய முன் வாரததைக் கண்டு நாம் வருந்துகிறோம். ஜில்லா போர்டுகள், தாலுக்கா போர்டுகள், தலைவர்கள் சிலரும் நம் விஷயமாகச் சிரத்தைக் காட்டி வந்திருப்பதற்காக அவர்களுக்கும் நாம் கடமைப்பட்டுளோம். கூடிய சீக்கிரத்தில் மற்றவர்களும் நமக்கேற்ற உதவிபுரிந்து நாம் அடைய விரும்பும் நற்காரியம் சாத்தியமாகச் செய்வார்களென்றே நம்புகிறோம். இதுவரை தாராளமாக உதவி புரிந்து நம்மை ஆதரித்து வந்திருக்கும் போஷகர்கள் முன்னிலும் அதிகமாக உபகாரம் செய்வார்களென்று திடமாக நம்பி யிருக்கிறோம். இன்னும் சில மாதங்களுக்குள் பஞ்சாயத்துக்கள் விசால அபிவிருத்தியடைந்து, நாளடைவில் நமது நோக்கம் பெரிதும் கை கூடுமென்று எதிர்ப் பார்க்கிறோம். இதை நாம் முடிக்கும் சமயத்தில் ஸ்தல ஸ்தாபன போர்டுகள் இன்ஸ்பெக்டரிடமிருந்து ஒரு அறிக்கை வரப் பெற்றோம். அது வேறிடத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அதில் கூறப்பட்டுள்ளவாறு உடனே நடந்து கொள்ளும் பக்ஷத்தில் இன்னும் 6-மாதங்களுக்குள் திறமையான புஞ்சாயத்துக்கள் அனேகம் தோன்றக்கூடும். ஒரு பஞ்சாயத்தைப் பலப்படுத்தி நன்றாக வேலை செய்ய 6-மாதமாகலாம். உற்சாகம் வாய்ந்ததே சில சேகவர்களுக்கு இதனால் 6-மாதங்களுக்கு வேலை ஏற்படும்.

இந்த சந்தர்ப்பத்தில் பொது ஜனங்களுக் கொரு விக்ஞாபனம்செய்து கொள்ள விரும்புகிறோம். கிராமப் பஞ்சாயத்து அபிவிருத்திப் பொறுப்பு அதன் தலைவர்கள், மெம்பர்களை மாத்திரம் சார்ந்ததென்றெண்ணக்கூடாது. நாட்டின் நலத்தில் சிரத்தையுள்ள சகல ஆண் பெண் மக்களும் இதில் பொறுப்பு ஏற்கவேண்டும். கிராம அபிவிருத்தி பூராவும் இதனால் தான் ஏற்படவேண்டு மாகையால் எங்களுடைய வேலையில் கவனம் செலுத்தி இந்தியாவின் அஸ்திவாரத்தைப் பலப்படுத்தி நாட்டின் வருங்கால வாழ்க்கை சீராக நடைபெறுவதற்கான பேருதவியை எங்களுக்கு அளிக்க

வேண்டுமென்று நாங்கள் கேட்டுக்கொள்ளுகிறோம். இந்தியர்கள் ஆவலாக எதிர்ப்பார்க்கும் நல்ல காலம் கிட்டுவதற்காகவே நாம் முயன்று வருகிறோம். இது காரணம் பற்றியே எங்களுக்கு வாய்த்திருக்கும் இந்த சொற்ப பக்கங்களில் கிராம வாசிகளின் தேவைக்கேற்ற விஷயங்களைச் சென்ற 12 மாதங்களாக விசாரணை செய்து வந்திருக்கிறோம். தத்துவ வியாக்கியானங்களில் காலதாமதம் செய்யாமல் இதுவரை யிருந்துவந்திருக்கிறோம். பொதுஜன ஆதரவதிகரிப்பதற்கேற்ப அதே முறையை இனியும் அனுஷ்டித்து வருவோம். பூர்ண சுயராஜ்யம் ஏற்பட்டதும் கிராமப் பஞ்சாயத்துக்கள் சாஸ்வதமாக நீடிக்கவேண்டுமென்பது எங்கள் கொள்கை. இப்பத்திரிகையை நாம் பிரசுரித்து வரும் வரை இக்காரியம் ஐயமுற நடைபெறும் வழியில் வேலை செய்து வருவோம். இதை வாசிப்பவர்களும் அபிமானிகளும் இதற்கான உதவி புரிய வேண்டுமென்று ஆவலாகக் கேட்டுக்கொள்ளுகிறோம். அவர்கள் தாராளமாக முன் வருவார்களென்றும் நாங்கள் தேர்ந்திருக்கிறோம். நம்மையாளும் கடவுள் இதுகாறும் கிருபை கூர்ந்து அருள் புரிந்திருப்பதை நாம் மனமாற ஏற்றுக்கொண்டு நாமாக வலுவில் மேற்போட்டுக்கொண்டு சேவைப் புரிய முன் வந்திருக்கும் வேலையை மேல் நடத்திச் செல்ல அருள் புரிய வேண்டுமென்றும் பிரார்த்திக்கிறோம்.

வனப் பஞ்சாயத்துகள்.

வனப் பஞ்சாயத்துகளின் 1930-31-ம் வருஷ நிர்வாக யாதாஸ்து இப்பொழுது தான் வெளியிடப்பட்டிருக்கிறது. இது வாசிப்பதற்கு சுவாரஸ்யமாயில்லை. பஞ்சாயத்தபிமானிகள் திருப்தியடையக்கூடிய விஷயம் ஒன்றும் அதில் காணப்படவில்லை. மொத்தம் ஏற்பட்டுள்ள 994 பஞ்சாயத்துகளில் 29 தான் சட்டப் பூர்வமாக உற்ற அதிகாரங்கள் வைத்திருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. இதைப்பற்றிய விவரம் பின் வருமாறு எழுதப்பட்டிருக்கிறது.

> "இந்த வருஷம் கடப்பை ஜில்லாவில் ஒரு பஞ்சாயத்துக்கு வனச் சட்டப் பிரகாரம் அதிகாரமளிக்கபபட்டது; வட ஆற்காட்டில் இரண்டு பஞ்சாயத்துகள் தங்களதிகாரங்களை அநியாயமாகவும், கிரமமில்லாத வழியிலும் செலுத்தியதனுல் அவற்றிற் களிக்கப்பட்ட அதிகாரங்கள் ரத்து செய்யப்பட்டன. இதே ஜில்லாவில் அதிகாரம் பெற்ற மற்று மிரு பஞ்சாயத்துகள் வேலை செய்யாமல் போய்விட்டன! அவற்றிற்குப் பதிலாக நியமிக்கப்பட்டிருக்கும் பஞ்சாயத்துகளுக்கு இன்னும் அதிகாரம் அளிக்கப்படவில்லை."

இதிலிருந்து சட்டப் பூர்வமான அதிகாரம் செலுத்தும் பஞ்சாயத்துகள் தொகை சென்ற வருஷத்தைக் காட்டிலும் மூன்று குறைவு என்பதேற்படுகிறது.

இந்தப் பஞ்சாயத்துகள் 1913-ம் வருஷத்திலே ஏற்பட்டனவென்பதை நமது வாசகர்கள் தெரிந்துக்கொள்ளவேண்டும். மொத்தம் ஏற்பட்ட 994 பஞ்சாயத்துகளில் 18 வருஷங்களுக்குள் 29 பஞ்சாயத்துகள் தான் சட்டப் பூர்வமான அதிகாரம் வகிக்கலாமென்றேற்பட்டிருப்பதிலிருந்து பஞ்சாயத்துகள் திருப்திகரமாக வேலை செய்கின்றனவென்று கவர்ன்மெண்டு சொல்லிக்கொள்வது என்ன நியாயம். 133 பஞ்சாயத்துகள் நன்ருக வேலை செய்கின்றனவென்றும், 559 சுமாராகவிருக்கின்றனவென்றும் கவர்ன்மெண்டே ஒப்புக்கொள்ளுகிறது. "சுமாராக" விருப்பதை விலக்கி விடுவோம். பாக்கியில் 100-க்கு 21-வீதம் கணக்காகும் நன்ருக வேலை செய்து வரும் பஞ்சாயத்துகளுக்கு சட்டப் பூர்வமான யோக்கியதை கிடையாது. இந்த இலாகாவின் திறமை எவ்வளவென்பதைத் தெரிந்துகொள்ள இதைவிடக் கேவலமான அத்தாட்சி வேண்டியதில்லை.

இந்த ரிப்போர்ட்டில் இன்னும் ஓர் விஷயத்தை மாத்திரம் கவனிப்போம்" ஆரம்பத்திலிருந்த பஞ்சாயத்தில் 1047 என்றும் இவை 994 ஆகக் குறைந்துவிட்டனவென்றும், இவை நிர்வாகத்திற்குட்பட்ட விஸ்தீர்ணம் 3425·19 சதுர மைலிலிருந்து 3383·78 சதுர மைலாகச் சுருங்கிவிட்டதென்றும் கூறப்பட்டிருக்கிறது. மிஸ்டர் வைட்ஹெட் பஞ்சாயத்து பிரிவினை விஷயமாகச் செய்துள்ள சிபார்சுகளை சரியாக ஏற்காமல் மிகவும் அதிருப்தியான வழியில் 1926-27-ம் வருஷத்தில் ஒரு முடிவேற்பட்டது. அதன் பிரகாரமே 3451·26 சதுர மைல் விஸ்தீர்ணம் பஞ்சாயத்துகளிடம் ஒப்புவிக்கப்படவேண்டுமென்று அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த அளவு விஸ்தீர்ணம் பஞ்சாயத்தாரிடம் சேர்ப்பிக்கப்பட்டிருப்பதாக போன வருஷத்திய யாதாஸ்து குறிப்பிடுகிறது. அவ்விதமிருக்கையில் 3383·78 சதுர மைலாகக் குறைய நேர்ந்த காரணம் யாதென்பதை இந்த ரிப்போர்ட்டு திருப்திகரமாக விளக்கவில்லை." 3 ரிஸர்வ்களை முதல்தர வகுப்புக்கு மாற்றிவிட்டதனுலும் கர்னூல் ஜில்லாவில் 8 ரிஸர்வ்களையும், நெல்லூர் ஜில்லாவில் ஒரு ரிஸர்வும் வன இலாகாவிற்கு மாற்றப்பட்டதனுலும் விஸ்தீர்ணம் குறைந்துவிட்டதென்று சமாதானம் கூறப்படுகிறது. இந்த மாறுதல்களின் விருத்தாந்தம் பூராவும் தெரிவிக்கப்படின், அநேக முக்கிய விஷயங்கள் வெளி வந்திருக்கும். இந்த ரிப்போர்ட்டை அதி விரிவாக ஆராய இங்கு இடமில்லை. ஆனல், மேலே காட்டியுள்ள முக்கிய அம்சங்களிலிருந்து காட்டுப் பஞ்சாயத்து நிர்வாகம் அபிவிருத்தி யடையாமல் பெரிதும் தடைப்பட்டிருக்கிறது என்று வெளிப்படையாகிறது. நிலைமை சீர்ப்படவேண்டுமானல் ரயத்துக் காடுகள் நிர்வாகத்தை அதிகாரிகள் கையிலிருந்து மாற்றுவதைத் தவிர வேறு வழியில்லை. காடு சம்பந்தமான விஷயங்களின் நிர்வாகத்தை ஸ்தல ஸ்தாபன சட்டப் பிரகாரம் அமையும் கிராமப் பஞ்சாயத்துகளுக்குட்படுத்தி ஒரு சட்டமியற்றி அச்சட்டப் பிரகாரம் வனப் பரிபாலனம் நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும். வேறென்ன செய்தாலும் பயன்படாது.

———

தங்க நாணய மதிப்பும் இந்திய விவசாயியும்

விலை வாசிகள் படு இறக்கமாக வீழ்ந்துவிட்டன. இங்கிலாந்திலும் இந்தியாவிலும் வரவு செலவுதிட்ட சம்பந்தமாக சங்கடங்க ளதிகரித்திருக்கின்றன. இங்கிலாந்தில் தங்க நாணய மதிப்புக் கொள்கை கைவிடப்பட்டிருக்கிறது. இந்தியா கவர்ன்மெண்டு பண சம்பந்தமாக அவசரச் சட்டங்கள் பிறப்பித்திருக்கிறது. இந்தியா கவர்ன்மெண்டு உத்தரவின்பேரில் பாங்கிகள் மூன்று நாட்கள் வேலை செய்யாமலிருந்துவிட்டன. ரூபாய்க்கு வழக்கம்போல் 1 ஷி. 6 பெ. ஸ்டெர்லிங்காகக் கொடுக்கப்படுமென்று இந்தியா மந்திரி அறிக்கை வெளியிட்டார்; இந்திய மார்க்கெட்டுகளில் தங்க சம்பந்தமாக விசித்திரமான மாறுதல்கள் தோன்றி வருகின்றன. இந்த சம்பவங்கள் இத்தேச வாசிகள் மனதைக் கலக்கி வருகின்றன. இதன் பலன் யாதாக முடியுமென்பதைத் தெரிந்துகொள்ளச் சக்தியற்றிருக்கிறார்கள். பலர் பலவாறாகப் பேசிக்கொள்வதிலிருந்து நாட்டின் பொக்கிஷ நிலைமையிலிருந்த நம்பிக்கை தடுமாறி வருகிறது. இதைத் தடுத்து நிலைமை யாதென்பதை உள்ளவாறு தெரிந்துகொள்ள விஷயங்களை தெளிவுபடுத்த வேண்டியது அவசியமாகிறது.

உலகத்தில் மனிதப் பழக்கல் பரஸ்பர நன்மைக்காக பொருள் கைம்மாறி வருவது யாவரும் அறிந்த விஷயமே. ஒருவருக்குத் தேவையான சொத்தைப் பிறரிடமிருந்து பிரதியுபகாரத்தை எதிர்பார்த்து விற்பதே சுலபமான சொல் முதலாகும். இதற்குப் பண்டமாற்று என்று பெயர். பொருள்கள் அதிகரித்து மனிதனுடைய தேவைகளும் அதிகப்படுவதனால் ஒருவனுக்கு தேவையான பொருள்வேண்டுமளவு அயலலிருக்கும் இன்னொருவனிடம் இல்லாமற் போகலாம். ஒரு பண்டத்திற்குரிய மதிப்பு யாதென்பதை பண்ட மூலம் நிதானிப்பது சிரமமாகிறது. இந்த பேரம் இலகுவாயிருக்கும்பொருட்டு காசு நாணயம் அல்லது செலாவணி என்று ஓர் அளவு தோன்றலாயிற்று. பணம் நோட்டுகள் முதலிய செலாவணிக்கருவிகள் ஒன்றிற்காவது அவை கொள்ளும் பொருளைப்போல் உபயோகப்படமாட்டா. கொள்ளுமுதல் செய்பவர்கள் நம்பிக்கையுடன் ஒருவர்பொருளை ஒருவர் பெற்றுக்கொள்ள உபயோகமாகவே இவை ஒரு அளவாகக் கொள்ளப்படுகின்றன. இந்த நாணயங்களுக் காதாரமாக மதிப்பு வாய்ந்த பொருள் ஓரிடத்தில் ஜாக்ரதையாக வைக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆதாரத்தை நிர்ணயிக்கும் பொறுப்பு கவர்ன்மெண்டால் வகிக்கப்படுகிறது. மிக சிரேஷ்டமான உலோகமாகிய தங்கம் வெளிநாடுகளுக்குச் செல்லாமல் கவர்ன்மெண்டு அடக்கியாண்டுவருகிறது. வெளி நாடுகளில் வியாபார சம்பந்தமாக ஏற்படும் செலவிற்குக் கொடுக்கப்படவேண்டிய கோடிக்கணக்

கான பவுன்கள் கவர்ன்மெண்டு ஆதாரம்பெற்ற நாணயமாற்றுப் பத்திரங்கள் மூலம் கொடுபடுகின்றன. இப்பத்திரங்கள் கொடுப்பதற்காக பாங்கிகள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த பாங்கிகள்மீது நம்பிக்கை யதிகரித்தால் தான் தற்கால செல்வநிலை ஸ்திரமாக அமையும். மதிப்புவாய்ந்த உலோகங்கள், மதிப்பு வாய்ந்த ஆஸ்திகள் முதலிய கவர்ன்மெண்டு ரிஸர்வு தொகை அதிகப்பட அதிகப்பட அவற்றின்பலமும் பெருகும். இதிலிருந்து நாம்தெரிந்துகொள்வதொன்று உண்டு. செலாவணிக்காக உபயோகிக்கப்படும் காகித நோட்டுகள் எவ்வளவு பழக்கப்படினும், ஜனங்களிடம் உலோகமதிகமாகவும், கடன்காரர்களுக்குக் கொடுப்பதற்கேற்ற சாமான்கள் போதிய அளவு தயாராகவு மிருந்தால்தான் அந்த நோட்டுகளுக்கு மதிப்பேன்படேற்படும். இந்த விஷயத்தைத் தெரிந்துகொண்டு உலகத்தில் தற்சமயமேற்பட்டிருக்கும் செல்வ சம்பந்த நிலைமையை நிதானித்தால் சகலமும் விளங்கிவிடும்.

நாணயங்களுக்கு இருவகை பிரயோஜனங்களுண்டு. நாணயமாற்றை நிர்ணயிப்பது ஒரு உபயோகமாகும்; சாமான்களின் மதிப்பை அளக்கும் கருவியாகக் கொள்வது மற்றொன்றாகும். இந்த இருவகை உபயோகங்களும் மாறி மாறி வருவது மாக்மியன் கமிட்டியின் அவசியமான ரிபோர்ட்டில் நன்றாக வருணிக்கப்பட்டிருக்கிறது. விக்டோரியா ராணி யாண்டுவந்த 19-ம் நூற்றாண்டில் முதல் உபயோகம் அதிகமாக உணரப்பட்டு வந்திருக்கிறதென்றும், பிற்காலத்தில் இரண்டாவது உபயோகம் பெரிதுபடுத்தப்பட்டு வந்திருப்பதாகவும் அந்த ரிபோர்ட்டில் எழுதப்பட்டிருக்கிறது. தற்காலத்தில் நாணய மதிப்பைக் குறிக்கும் காகித நோட்டுகள் அதிகமாக உபயோகப்படுத்தப்பட்டு வருவதனால் நாணயமென்றால் அது ஒரு உலோகத்தின் மதிப்பைப் பொருத்திருக்கிறதென்ற உணர்ச்சி மறைந்து வருகிறது என்றும் அந்த ரிபோர்ட்டில் எழுதப்பட்டிருக்கிறது.

பற்பல தேசங்களிலும் செலாவணி விஷயம் சரியாக நிதானிக்கப்படாததனால் உலக அபிவிருத்தி யதிகம் தடைப்படுகிறது. நாணயத்திற்கு குறிப்பிட்ட அளவு தங்கத்தை ஆதாரமாகக் கொண்டதே இக்கால கவர்ன்மெண்டுகள் செய்த பெரிய மதிமோசம். அதனால்தான் பல தேசங்களில் தங்க ஆதார நாணயம் கைவிடப்பட்டு வருகின்றன. கடந்திருப்பதை என்னவென்று கவனிப்போம்.

ஒவ்வொரு தேசத்திலும் பணமதிப்புக் குறிப்பிட்ட மாத்து எடைத் தங்கத்தைக்கொண்டு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக இங்கிலாந்தில் பவுன் ஸ்டர்லிங் என்பது நாணயம். இதற்குத் தங்கமதிப்பு ஏற்படுத்தி, தங்கம் விலை மாறியபோதிலும் ஓரளவுமாற்றும் 113 கிரெயின்கள் எடையுமுள்ள தங்கம் கொடுத்தால் பவுன் ஸ்டர்லிங்கு மதிப்பு உண்

டென்று விதிக்கப்பட்டது. தேசத்தின் செலாவணிக்குப் பதிலாக கேட்கும்போதெல்லாம் அதன் மதிப்பிற்கேற்ற தங்கமோ, நாணயமோ கொடுக்க வேண்டுமென்பது விதி. தவிரவும் சாமான்கள் தடைப்படாமல் தாராளமாக விற்பனையாவதற்கும் உதவி புரியவேண்டிய நிர்ப்பந்தமுமேற்படுகிறது.

இவ்விதமாகவே தங்கடாலருக்கு 23·22 தானிய எடை தங்கம் கொடுக்கப்படுமென்று நிர்ணயிக்கப்பட்டுளது. நாட்டில் வழங்கிவரும் நாணயத்தைப் பவுனாக மாற்ற விரும்புபவர்களுக்கு இந்த அளவுப்பிரகாரம் தங்கமோ தங்கக் காசோ கொடுக்கவேண்டுமென்ற நிர்ப்பந்தம் பொக்கிஷ அதிகாரிகளுக்கு ஏற்பட்டுவிட்டது. தங்க ஆதார நாணயம் வழங்கிவரும் நாடுகளில் தங்கத்தைத் தடைப்படுத்தாமல் விற்பதற்கு உதவி புரியவேண்டுமென்றும் அந்தந்த தேச சர்க்கார் உத்தரவாத மளித்திருக்கின்றனர். தடைப்படுத்துவது கூடாதென் றேற்பட்டதனால் எவரும் தங்களிஷ்டப் பிரகாரம் தங்களிடமிருக்கும் தங்கத்தை ஏற்றுமதி இறக்குமதி செய்யவோ அல்லது தங்கத்தை உருக்கி, நாணயமாக அச்சிடவோ பூர்ண சுதந்தரம் வாய்ந்திருக்கின்றனர்.

தங்கத்தின் விலையோ உலக வியாபாரத்திற் கேற்ப மாறிவந்திருக்கிறது. இங்கிலாந்திலிருந்து சாமான் ஏராளமாக வாங்கிய பிற நாட்டார் அச்சாமான்களின் கிரயத்தைத் தங்கமாக அனுப்பினர்கள். இதர தேசங்களில் அந்தத் தங்க மதிப்பு யாதாயிருந்தாலும் இங்கிலாந்தில் ஸ்டர்லிங்கிற்கு எவ்வளவு கொடுபடும் என்பது அசையாத வழியாயிருந்தது. மகாருக்கும் வெளியூர்கள் இங்கிலாந்திலிருந்து தங்கள் சொத்தை எடுத்துச் யுத்தம் முடிந்ததும் எல்லா விஷயங்களிலும் மாறுதல்கள் தோன்றலாயின. இங்கிலாந்தில் வியாபாரமும் பாதிக்கப்பட்டது. தங்கம் உள்ளூருக்கு வந்துகொண்டிருந்தது மாறி, பிரான்ஸ், அமெரிக்கா முதலிய தேசங்களுக்கு அனுப்பப்படவேண்டிய ஸ்திதி வந்துவிட்டது. இங்கிலாந்தில் வரவு செலவு திட்டம் சரிக்கட்டுவது சிரமமாகிவிட்டது. இதுகாறும் அசைக்க முடியாதிருந்த இங்கிலாந்திலும் கூட, தேசீய வருமானமுங் குறைந்துபோய், செலவுமாத்திரம் அதிகரிக்கலாயிற்று. இங்கிலாந்து, வெளியூர்களில் ஏராளமாக முதல் போட்டிருக்கிறபடியால் இதன் வருமானமே அத்தேசத்தின் பெரும் ஆஸ்தியாகும். இந்த ஆஸ்தியை திரட்டுவது இப்பொழுது சுலபமாகக் காணப்படவில்லை. இங்கிலாந்தை நம்பி அவ்வூரில் முதல் போட்டி செல்லப் போகத்தலைப்பட்டார்கள். இங்கிலாந்து சம்மாளிப்பது சிரமமாகிவிட்டது. பிரான்ஸூம், அமெரிக்காவும், இங்கிலாந்துக்காக ஏழரைக் கோடி ஸ்டர்லிங்குக்கு சொற்பகாலம் ஜவாப்பு நின்று உதவி புரியவேண்டியதாயிற்று. உடனே இங்கிலாந்து விழித்துக்கொண்டு, சாத்யமான காரியத்தைத் தயங்காது செய்ய நேர்ந்தது. தேசியச் செலவுகளைக்குறைத்

துக்கொண்டு, வரவு செலவு திட்டம் சரிக்கட்டப்பட்டது. நாணயத்தின் தங்க அளவு ஆதாரம் கைவிடப்பட்டது. நாணயத்திற்கேற்ற மதிப்புத் தங்கம் தானகவே அமையுமாறு விடப்பட்டிருக்கிறது. சூட்டோடு சூடாக இங்கிலாந்திலிருந்து வெளிதேசங்களுக்குத் தங்கத்தையனுப்பி முதல்போடக்கூடாதென்று தடுக்கப்பட்டது. இக்காரியங்களினுலும் இங்கிலாந்திற்கு வெளி நாடுகளிலிருக்கும் மதிப்பினுலும் அத்தேசத்தின் செல்வ நிலைமை தடுமாருமல் ஸ்திரமான யோக்யதையி லமரக்கூடும்.

ஆனல் இந்தியாவின் செல்வ நிலைமையோ, அவ்வளவு சுலபமாக வில்லை. இந்நாட்டின் செலாவணி விஷயம் மிகவும் மோசமானவழியில் ஊழலாக நிர்வகிக்கப்படுகிறது. நமது ரூபாய்க்கு சுதாவாக ஒரு யோக்கியதை கிடையாது. தங்க நாணய செலாவணி கூட கிடையாது. நமது நோட்டுகளும், ரூபாய் நாணயமும் கஜானுவிலிருக்கும் ரிஸர்வ்களின் ஆதாரத்தைக்கொண்டு வழங்கிவருகின்றன. இங்கிலாந்திலும் மற்ற தேசங்களிலும் தோன்றிவரும் செல்வ நிலைமையினுல், இந்த ரிஸர்வ்களும் கரைந்து போகின்றன. இந்தச் சம்பந்தம் போதாதென்று ரூபாய்க்கு ஸ்டர்லிங்க் விகித மதிப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த மாற்ற விகிதம் கூட திடமானதாகக் காணப்படவில்லை. இந்த விகிதத்தைக் கவர்ன்மெண்டு தம் மிஷ்டப்படி மாற்றி யமைத்து நாட்டில் செல்வ நிலைமையில் பேரதிர்ச்சிகளை விளைவித்து வந்திருக்கிறது. சமீபத்தில் செய்திருப்பது என்னவென்ருல், ரூபாயை தங்கமாற்று மதிப்பிழைந்து ஸ்டர்லிங்குடன் பிணைத்து அந்த ஸ்டர்லிங் விகிதப்பிரகாரம் ரூபாய்க்கு 1 ஷி. 6 பென்ஸ் கொடுக்கப்படும் என்று விதித்திருப்பதே. ஸ்டர்லிங் மதிப்போ, உலக விலைவாசிப் பிரகாரம் குறைந்துபோய்க் கொண்டிருக்கிறது. இக்குறைவிற்கேற்ப நம் ரூபாயின் மதிப்பு மாறுவதற்கு இடமே இல்லாமல் செய்திருக்கிருர்கள். இந்தச் சிக்கலான இந்தியாச் செலவாணி விஷயத்தை சகல சாதாரண மனிதர்கள் கூட தெரிந்துகொண்டால் தான் உலகத்தில் தோன்றிவரும் மாறுதல்களை புத்திசாலித்தனமாகத் தெரிந்துகொள்ள முடியும்.

இந்திய பொக்கிஷ செலாவணி விஷயம் அவ்வளவு சுலபமாகவில்லை. நம் நாட்டில் செலாவணி விஷயம் இதர தேசங்களைப்போல் அதிகாரிகளால் அடக்கப்பட்டு வருவது மாத்திரமில்லாது தாருமாருகவும் உபயோகிக்கப்பட்டு வருகிறது. ரூபாய்க்கு சட்டப் பிரகாரம் விதிக்கப்பட்டுள்ள பூர்ண மதிப்பு அதிலடங்கியுள்ள வெள்ளிக்குக் கிடைப்பதில்லை. நம் நாட்டில் தங்க நாணயமும் கிடையாது. நோட்டுகளும் ரூபாய்களும் செய்வதற்கு கஜானுவிலடங்கியுள்ள ரிஸர்வ்களின் மதிப்பைப் பொருத்திருக்கின்றன. பொதுவாக உலகத்தில் ஏற்பட்டுள்ள பண நெருக்கடியும், அதிலும் முக்கியமாக இங்கிலாந்தின் நிலைமையும், இந்தியா கவர்ன்மெண்டு அனுஷ்டித்து

வரும் செலாவணி நாணயமாற்றுக் கொள்கையும் சேர்ந்து நம் நாணயங்களுக்கு ஆதாரமாயுள்ள ரிஸர்வ்கள் கேவலமான அளவு கரைந்துபோய் விட்டன. ரூபாய்க்கு ஸ்டெர்லிங்கைக்கொண்டு மதிப்புக் கூறவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. இதனால் ஒரு ஸ்திரமான மதிப்பு இல்லாமல் போய்விட்டது. கவர்ன்மெண்டோ அடிக்கடி ஒரு மதிப்பைத் தாமாக சிருஷ்டித்து நாட்டின் செல்வ நிலைமையின் சங்கடங்களைக் கிளப்பியுமிருக்கிறார்கள். இவ்விதம் செய்ததனால் சமீபத்தில் நேர்ந்துள்ள காரியம் ரூபாய்க்கு 1 ஷி. 6 பென்ஸ்வீதம் ஸ்டெர்லிங் மதிப்பேற்படுத்தியிருப்பதே யாகும். இங்கிலாந்தில் நாணயத்தின் தங்க மதிப்பு கைவிடப்பட்டு ஸ்டெர்லிங் பவுனுக்கு மதிப்பு வீழ்ந்திருப்பதை யறிந்தும் இவ்வாறு செய்யப்பட்டிருக்கிறது. நம் நாட்டு விவசாயிகளும், இதர தேசங்களுக்கு சரக்குகள் அனுப்புபவர்களும் தங்களுடைய செல்வ நிலை யாதென்பதை தெரிந்து கொள்ள விரும்பின், இந்தியச் செலாவணி பிரச்னைகளை நன்றாகத் தெரிந்து கொள்ளவேண்டிய தவசியமாகிறது.

ஒரு பயிரை உதாரணமாக எடுத்துக்கொண்டு இதன் பேரம் நடக்கும் நீதியைக் கவனிப்போம். விவசாயி தான் பயிரிடும் கடலைக்கொட்டையை பக்கத்தூரிலிருக்கும் பட்டணத்துக் கடைக்காரனிடம் விற்பதாக வைத்துக் கொள்வோம். கடைக்காரன் அவற்றை வாங்கி ராலி பிரதர்ஸ், லூயிடிரைபஸ் போன்ற கம்பெனிகாரரிடம் விற்கிறான். இந்த கம்பெனிக்காரர்கள் பாங்கியிலிருந்து கடன்வாங்கி கடலைக்காரர் பணத்தைக் கொடுக்கிறார்கள். கம்பெனிகள் கடலை மூட்டைகளை வெளியூர்களுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். அங்கிருந்து வரவேண்டிய பணம் ஸ்டர்லிங் உண்டியல்களாக விருக்கின்றன. சரக்குகள் பிரான்ஸ், ஜெர்மனி, இடாலி, அமெரிக்கா முதலிய தேசங்களுக்கு அனுப்பப்பட்டு அத்தேச நாணயங்கள் மூலம் வாங்கப்பட்டபோதிலும் பணம் இங்கிலாந்திலிருந்து ஸ்டர்லிங்கு மூலமே கிடைக்கின்றன. இவ்வாறே தான் இறக்குமதி விஷயமும் நடைபெறுகிறது. நமது ரயத்துகளுக்குத் தேவையாயிருக்கும் சாமான்கள் பல அமெரிக்கா, ஜெர்மனி, ஆஸ்திரியா, ஜப்பான் முதலிய நாடுகளிலிருந்து வருகின்றன. இவற்றிற்குக் கொடுக்கப்படவேண்டிய கிரயம் அந்தந்த தேசத்தில் வழங்கும் நாணயத்திலேயெ செலுத்தவேண்டும். ஆகையினால் தான் இந்தியச் செலாவணி உலகத்தில் எத்தேசத்திலும் எடுபடக்கூடியவாறு இந்திய நாணய விகிதமாக அமைக்கப்படவேண்டி யிருக்கிறது. பிரிட்டிஷ் ஸ்டர்லிங்கையும், இந்திய நாணயமாகிய பூர்ண மதிப்பில்லாத ரூபாயையும் பிணைக்கப்பட்டிருக்கிறது. இதை விட்டு உலகத் தேவைக் கேற்றவாறு அமைக்கவேண்டியது அத்தியாவசியமாகிறது.

உலகத்தில் வழங்கி வரும் இதர நாணயங்களுக்கும், நம் நாட்டு நாணயத்திற்கும் ஏற்பட்டிருக்கும் சம்பந்தம் இருவகைப்படும். (1) வெள்ளி

கிரயத்திற்கும், தங்க மதிப்பிற்குமுள்ள சம்பந்தம் ஒன்று. (2) நமது ரூபாய்க்குப் பவுன் ஸ்டர்லிங்கு மதிப்பு யாதென்பது மற்ருென்று. நமது ரூபாய்க்கு வெளியூர்களில் நாணயமென்ற மதிப்பேயில்லாததினுல் முதல் விஷயம் அவ்வளவு முக்கியமானதில்லே. 1893-ம் வருஷத்தில் நமது ரூபாய்க்கு வெள்ளிமதிப் பேற்படாம லிருக்கவேண்டுமென்று செய்த ஏற்பாட்டின் நோக்கம் மார்க்கெட்டில் வெள்ளிவிலே மாறுவதைப்போல் நமது ரூபாயின் மதிப்பும் மாறக்கூடா தென்பதேயாகும். இவ்வித ஏற்பாடுகூட 1919-ம் வருஷ மாறுதலில் பலிக்கவில்லே. வெள்ளி கிரயம் ஏறியதும் ரூபாயின் மதிப்பு மாருமல்ப் போய்விட்டது. இன்றைக்கும் நமது ரூபாய் நாணயத்திற்கு வெள்ளிக் கிரயத்தைக்கொண்டு மதிப்பேற்படுத்துவதைத் தடுக்கவேண்டுமென்றும் நோக்கம் பின்பற்றப்பட்டு வருகிறது. நமது கஜானுவிலிருக்கும் பேபர் கரன்ஸி, வெள்ளி ரிஸர்வ், தங்க மதிப்பு ரிஸர்வ் முதலியவற்றைப்பற்றிய வரையில் ஏற்படும் விலே மாறுதல்கள், கணக்குப் புஸ்தகங்களில் காணப்படுமேயல்லாது இதர வழியில் வெளிதேச நாணய சம்பந்தத்தை நிர்ணயிக்க இது உபயோகிக்கப்படாது.

ஸ்டர்லிங் ரூபாய் சம்பந்தம் தான் முக்கியமாகும். இவ்விஷயமாகக் கவர்ன்மெண்டு இஷ்டப்படி மாறுட்டங்கள் செய்துகொண்டே வருகிருர்கள். விகிதம் சட்ட பூர்வமாக நிர்ணயிக்கப்பட்டு வருகிறது. நாணயப் பரிவர்த்தனே விகிதத்தில் ஒரு பென்னி ஏறித் தாழ்ந்தாலும் நமக்குப் பல துன்பங்களே விளேவிக்கின்றன. இதனுல் இந்திய விவசாயிகளுக்குக் கிடைக்கும் லாப நஷ்டம் பிரத்தியக்ஷமாகிறது. உதாரணமாக பரிவர்த்தனே விகிதம் 1 ஷிலிங் 4 பென்ஸிலிருந்து 1 ஷிலிங் 6 பென்ஸாக மாற்றப்பட்டதும் இங்கிலாந்திற்கு 100 பவுன் மதிப்புள்ள தானியமனுப்பிய விவசாயிக்கு ரூபாய் 1,500-க்குப் பதிலாக ரூபாய் 1,333-5-4 தான் கொடுக்கப்பட்டது. இதிலிருந்து 100 பவுனுக்கு ரூபாய் 166-10-8 வீதம் நஷ்டமேற்பட்டிருக்கிறது. இவ்வளவு நஷ்டத்திற்குப் பிரதியாக ரயத்து வாங்கிய சாமான்களிலேனும் லாபம் கிடைத்ததாவென்று கவனித்தால் அது அதி சொற்பமென்பதும் விளங்கும். ஏனென்ருல், நமது விவசாயிகளுக்குத் தேவையாகும் சாமான்கள் மிகவும் கொஞ்சமே. தாம் விற்பனே செய்யும் பொருள் கிரய அளவு வெளி சாமான்கள் அவர்கள் வாங்குவதில்லே. நம் நகரங்களில், வெளியூர் சாமான்களே இறக்குமதி செய்து வியாபாரம் செய்பவர்களுக்கும் அதை வாங்கி உபயோகிப்பவர்களுக்கும் 1 ஷிலிங் 6 பென்ஸ் விகிதத்தினுல் உண்மையாக கொஞ்சம் லாபம் கிடைத்திருக்கும். இதனுல் இங்கிலாந்திற்கு லாபமில்லாமலில்லே. இங்கிலாந்திலிருந்து இந்தியாவில் சாமான்களே இறக்குமதி செய்வது ரூபாய் மதிப்பில் கணக்கிட்டால் கலிவாக விற்க முடிகிறது. இந்த ஆதாயத்தினுல் இந்தியாவில் செய்யப்படும் சாமான்களுக்கு விலே யதிகமாயிருப்பதனுல் கிராக்கி குறைந்து விடுகிறது. இதைத் தவிர

கவர்ன்மெண்டின் நாணயமாற்றச் செய்கையினல் ரயத்துகளுக்கு நஷ்டம் விளைவித்த விஷயங்கள் வேறு பலவுமுள. ரூபாய் நாணயத்தொகையளவையும், நோட்டுகள் தொகையையும், மார்க்கெட்டில் பணம் கடன் வாங்கச் செய்த ஏற்பாட்டிலும், கவர்ன்மெண்டு கையாண்ட முறைகள் யாவும் நேர்மையாயில்லை. இக்கோளாறுகள் வெகு காலமாக நீடித்து வந்திருக்கின்றன. நமக்கு இவ்விஷயமாக பூர்ண அதிகாரம் ஏற்பட்டாலல்லது இவை தீராது. இவற்றை நாம் கவனிக்கப் புகவேண்டியதில்லை.

ஆனல், இந்தியா மந்திரி தம்முடைய ஆக்ஞையினல் உலக சம்பந்தப்பட்ட நாணய விகிதத்தில் சிக்கலை யுண்டுபண்ணி யிருப்பதையே நாம் கவனிக்கவேண்டும். ரூபாயை அசைக்க முடியாமல் ஸ்டர்லிங்குடன் பிணைத்து விட்டார். ஸ்டர்லிங்கிற்குத் தங்க நாணய மதிப்பிருந்த வரையில் இந்தப் பிணையினல் பாதகமில்லா திருக்கலாம். இதனல் இந்திய நாணய மாற்று பரிவர்த்தனை தங்க மதிப்பைக்கொண்டு அமைக்கப் படுவதாகக் காணப்படினும், இந்தியர்கள் விரும்பும் தங்க நாணய ஆதாரம் ஏற்பட்டதாகாது. ஸ்டர்லிங்குக்குத் தங்க மதிப்பு உலக லேவாதேவி மூலம் அமையவிட்டு, தங்க ஆதாரமற்ற ஸ்டர்லிங்குடன் பிணைப்பது நேர்மையாகாது. பம்பாயில் ஒரு பிரசங்கத்தில் ஸ்ரீமான் மேத்தா கூறியவாறு மீகாமனில்லாத மரக்கலம் போல் நம் நாணய விகிதம் திண்டாடித் தவிக்கிறது. இதனல் ஏற்படக் கூடிய விபரீதம் வேறொன்றும் உண்டு. இந்நாட்டுச் செலாவணியில் தங்கம் வெள்ளிக் கிருந்துவந்த சம்பந்தம் விசேஷமாக மாறுதலடைய நேரும். இங்கிலாந்தில் நாம் செலவிடவேண்டிய் பணத்தைப்பற்றிய வரையில் ஸ்டர்லிங் பிணைப்பு நமக்கு லாபகரமாயிருப்பதாகவே வைத்துக்கொள்ளுவோம். ஆனல் நாளுக்கு நாள் விதேச வர்த்தக மதிகரித்து வருகிறது. அத்தேச நாணய விகிதப்பிரகாரம் கொள்ளுமுதல் செய்வதனல் நமது ரயத்துகளுக்கு லாபநஷ்டம் மாறிவரக்கூடும். தற்சமயம் தங்கம் சில தேசங்களில் மாத்திரம் குவிந்திருப்பதினல் அவை வெளிவரத் தாமதமேற்படும். இதனல் வெள்ளியின் மதிப்பு இதுவரை நேராத வழியில் உயரக்கூடும். இச்சமயத்தில் இரட்டை உலோக நாணயமிருக்கவேண்டிய அவசியத்தை வற்புறுத்துபவர்களு மிருக்கின்றனர். வெள்ளி நிலை யாதாயிருப்பினும், நமது ரூபாயை நிதானம் தவறியிருக்கும் ஸ்டர்லிங்குடன் சேர்த்திருப்பதனல் நஷ்டப்பட வேண்டியிருக்கிறது. சுயேச்சையாயுள்ள எந்த நாடும் இத்தகைய கஷ்டத்தை வலுவில் சுமக்கத் துணியாது. இந்திய ராஜபிரதிநிதி கூட்ட ஆரம்பத்தில் ரூபாயை ஸ்டர்லிங்கிலிருந்து பிரித்துவிட்டார். ஆனல் பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தில் கண்ணும் கருத்துமாயிருக்கும் இந்தியா மந்திரி ரூபாயை ஸ்டர்லிங்குடன் சாசுவதமாகப் பிணைத்துவிட்டார். இதனல் உண்மையாக நேர்வது யாதென்றல், பவுனுக்கு மதிப்புக் குறைந்து போய்விட்டதனல் பிரிட்டிஷ் வர்த்தகத்

திற்கு பிரத்யேக சலுகை ஏற்பட்டுவிட்டது. நமது நாட்டிலிருந்து தங்க ரிஸர்வ் யாவும் வடிக்கப்பட்டு நாம் கூடிய சீக்கிரம் தேசிய வரகைஷகளாகத் தவிக்கவேண்டிய கஷ்டமும் சம்பவிக்கக்கூடும். ஸ்டர்லிங் ரூபாய்ப் பிணைப்பினால் ஆதாயமொன்றுமில்லையென்று கூறவும் முடியாது. பவுன் ஸ்டர்லிங்கு மதிப்பு அதிகம் வீழ்ச்சி யடையாதவரை இந்தக் கட்டுப்பாடான ஏற்பாடு ரூபாயின் மதிப்பைத் தாங்கி வரும். ஸ்டர்லிங்கின் மதிப்பு சாசுவதமாக நிலைக் கிட்டியதில்லையாகையால் ஆதாரமற்றுத் தடுமாறும் ஒரு நாணயத்தை நாம் ரூபாய்க்குச் சரியான விகிதமாகக் குறிப்பிடுவது குறைவான செய்கை தான், ஆகையினால் ரூபாய்க்கு ஏற்ற சுய மதிப்பு தானாக ஏற்படுமாறு விடுவதே நல்ல காரியமாகும். அவ்விதம் செய்யத் தவறின், இந்திய கவர்ன்மெண்டு கூடுமானால் ஏராளமாகத் தங்கத்தை வாங்கி இந்தியாவில் ஸாவரின் அச்சிட்டு பிரிட்டிஷ் ஸ்டர்லிங்கைப்போல் இஷ்டப்படி அமைந்து விடுமாறு விட்டு விடவேண்டும். ரூபாய் மதிப்பு ரூபின் மார்க்கு போன்ற நாணயங்கள் மாதிரி தடுமாறித் தத்தளிக்குமென்று கூறுவது சரியான காரணமாகாது. தங்க மதிப்பிற்கேற்ற வெள்ளி விலைக்குக் கீழ் ரூபாய் ஒருக்காலும் இறங்க முடியாது. ரூபாயிலுள்ள வெள்ளியோ அல்லது ஸ்டர்லிங்குடன் பிணைக்கப்பட்டிருப்பதினால் ஏற்பட்டுள்ள மதிப்போ இந்த ரூபாயின் மதிப்பைத் தாங்கி வருவதாகக் கூறுவது சரியில்லை. நாட்டில் அமைதி நிலையில்லாதவரையில் ரூபாய்க்கு 16-அணு மதிப்பு யிருந்தே தீரும். வெளியூர் வர்த்தகர்களுக்குக் கொடுப்பதற்குப் போதிய தங்கமும் ரிஸர்வும் நம் நாட்டிலிருக்கும் வரை ரூபாய் நாணயத்திற்கு எவ்வித ஆபத்தும் வாராது. இந்த நிபந்தனைகள் பூர்த்தியாகாத வரை ரூபாயை ஸ்டர்லிங்குடன் பிணைத்திருந்தபோதிலும் அதுவும் மார்க்கு ரூபின் நாணயங்கள் கதிக்கு வந்து விடுமென்பது திண்ணம். உலகில் தங்கத்தை நிர்ணயித்து நாணயமேற்படும் வரையில், ரூபாயைத் தனியாக விடக்கூடாதென்று கூறுவது பொருத்தமற்ற பேச்சாகும்.

ரூபாயை ஸ்டர்லிங்குடன் இணைப்பதனால் நன்மை யதிகமோ, தீமை யதிகமோ என்பதைப்பற்றி நாம் இச்சமயம் விரிவுபடுத்த விரும்பவில்லை. ஸ்டர்லிங் மதிப்பு படுத்துவிடாமலிருக்கும் வரையில் இந்த ஏற்பாட்டினால் ரூபாய் மதிப்பு ஸ்திரமாயிருக்கலாம். ஸ்டர்லிங் ரூபாய்ப் பிணைப்பினால் வரவு செலவு திட்டத்தில், இங்கிலாந்தில் செலவிடப்படும் தொகை விகிதத்தில் 5 கோடி ரூபாய் மீருமென்று கூறப்படுகிறது. தற்சமயம் மார்க்கெட்டு விலைப் பிரகாரம் கணக்கெடுத்துப் பார்த்தால் ரூ. 16 அனுப்பவேண்டிய விடத்தில் ரூ. 13-5-4 அனுப்பினால் போதுமானதே. ஆனால், ஏற்றுமதி விஷயமாக ஏற்படும் பிரதிகூலத்தை நாம் கவனிக்கவேண்டும். வரவு செலவு திட்டத்தில் 5 கோடி ரூபாய் மீதத்திற் காசைப்பட்டு நம் விவசாயிகளுக்கு ரூ. 20 லிருந்து ரூ. 30 கோடிவரை நஷ்டமேற்படலாகிறது. ரயத்துக்

களின் நஷ்டத்திற்கான ஏற்பாடுகளை இந்தியா செய்யக்கூடாது. நூற்றுக் கோடிக் கணக்காக ஏற்றுமதி செய்வதனால் தான் நம் தேசம் ஜீவித்து வருகிறது. இந்தியர்களுடைய நஷ்டத்திற்கு வழிதேடினால் இவர்களுடைய வருமானமும் குறைந்துபோய் கவர்ன்மெண்டிற்கும் பெரு நஷ்டமேற்பட நேரும். ஆகையினால் ஸ்டர்லிங் பொறுப்பில் லாபம் தேடப்போய் இதர வழிகளில் பெரு நஷ்டம் சம்பவிக்கிறது. நாணயமாற்று விகிதம் ரூபாய்க்கு 1 ஷி. 6 பெ. அல்லது 1 ஷி. 8 பென்ஸாக உயர்ந்தால் என்ன நேரும். இதனால் இங்கிலாந்திலிருந்து இந்தியாவிலிறக்குமதியாகும் சாமான்களுக்கு விசேஷ சலுகை காட்டுவதாகு மல்லவா? இவ்விதமாக வேறு பலவழிகளிலும் சிக்கல்களை யுண்டுபண்ணுமாறு ரூபாயை ஸ்டர்லிங்குடன் பிணைப்பதில் என்ன பிரயோஜனம்? இதைக்கொண்டுதான் ரூபாயை ஸ்டர்லிங் குடன் பிணைப்பதில் கவர்ன்மெண்டு கொண்டுள்ள விசேஷ சிரத்தையை விட்டு ரூபாய் சுதாவாக பெறக்கூடிய மதிப்பு ஏற்பட விட்டுவிடவேண்டும். இவ்விதம் செய்தால் காலக்கிரமத்தில் ஒரு ரூபாய்க்கு 1 ஷி. 4 பெ. அல்லது 1 ஷி. 5 பென்ஸ் மதிப்புண்டாகும். அதற்கப்பால் திடீரென்று ஏற்றமோ இறக்கமோ ஏற்படாது.

தங்க மதிப்பு விஷயமாக ஏற்பட்டிருக்கும் கடுபிடியான நிகழ்ச்சிகளை கவனிக்குமிடத்து அப்பால் என்ன நேருமோ என்று எண்ணவேண்டியிருக்கிறது. பவுனுக்குத் தங்கமதிப்பு மீண்டும் ஏற்படக்கூடிய அறிகுறிகள் யாதேனும தென்படுகின்றனவா? இங்கிலாந்து 1925-ம் வருஷம் செய்ததைப்போல் மீண்டும் தங்கமதிப்பிற்கு வந்துவிடுமோ? அவ்விதம் வந்தால் தங்கமதிப்பு எவ்விதமாகக் கொள்ளப்படும். முன்னிலும் குறைவாயிருக்குமா? அல்லது முன்போலவே யிருக்குமா? அவ்விதம் செய்யாவிடில் இதர தேசங்களுடைய நாணயங்களுக்கு மாற்று விகிதம் எவ்வாறு ஏற்படுத்தப்படும்? இத்தகைய கேள்விகளுக்குப் பதில் கூறுவது சிரமமான விஷயம். "பவுண்டின் மதிப்பை 100-க்கு 20 விகிதம் குறைத்தால் திருப்திகரமான ஏற்பாடு செய்யப்படலாமென்று பொதுவாக ஒரு அபிப்பிராயமிருந்து வருகிறது. இவ்விதம் செய்தால் பவுண்டுக்கு 4 டாலர் அல்லது 100 பிரஞ்சு பிராங்குகள் கொடுக்கப்படு" மென்று ஒருவர் அபிப்பிராயம் வெளியிட்டிருக்கிறார். இந்த அபிப்பிராயம் கைகூடுமா என்பது சந்தேகம். சகல தேசங்களும் பரஸ்பர நல்லெண்ணத்துடன் ஒத்துப்போனால் தான் இது சாத்தியமாகும். இந்த நல்லெண்ணம் உதயமானாலும், ஆகாவிடினும், நம் நாட்டு செலாவணியைப் பற்றிய வரையில் நமது வர்த்தகம் தொழில் நலத்தைக் கருதி ரூபாயை ஸ்டர்லிங்குடன் பிணைத்திருப்பதை விடவேண்டுமென்றே நாம் வற்புறுத்துவோம்.

சென்னை மாகாண வனப் பஞ்சாயத்துகள்.

1930-31-ம் வருஷ யாதாஸ்து

சென்னை ராஜதானி வனப் பஞ்சாயத்துகள் 1930-31 ம் வருஷ நிர்வாக ரிபோர்ட்டில் ரெவினியூ போர்டு பின்வருமாறு எழுதியிருக்கிறது.

இந்த ரிபோர்ட்டு சம்மந்தப்பட்ட வருஷத்தில் மொத்தம் 994 பஞ்சாயத்துகளிருந்திருக்கின்றன. இவை நிர்வாகத்திற்குள்பட்ட விஸ்தீரணம் மொத்தம் 3,383·78 சதுர மைல்கள். இவை செலுத்திவந்த வரி வாய்தா ரூ. 1,55,488. சென்ற 1929-30-ம வருஷத்தில் 1047 பஞ்சாயத்துகளிருந்தன. இவை 3,425·19 சதுரமைல் விஸ்தீரணம் வியாபகமாயிருந்தன. அவ்வருஷ வரி வசூல் ரூ 1,59,026. இவ்வருஷம் பஞ்சாயத்துகள் குறைந்திருப்பதற்குக் காரணங்களாவன :

(1) திறமையாகவும் லாபகரமாகவும் பஞ்சாயத்து வேலை நடைபெறுவதை உத்தேசித்து அருகருகே யிருந்த சிறிய பஞ்சாயத்துகள் ஒன்றாகச்சேர்த்து பெரிய பஞ்சாயத்துகளாக அமைக்கப்பட்டன. (2) மூன்று ரிஸர்வ்கள் முதல் வகுப்பாக மாற்றப்பட்டன. கர்னூல் ஜில்லாவில் 3 ரிஸர்வ் காடுகளும், நெல்லூரில் 1 ரிஸர் வும், வன இலாகாவிற்கே மீண்டும் மாற்றப்பட்டன. (3) செங்கற்பட்டு வட ஆற்காடு ஜில்லாக்களில் சில ரிஸர்வ்கள் அழிக்கப்பட்டுவிட்டன.

வரி வாய்தா வருமானக்குறைவிற்குக் காரணம் பஞ்சாயத்து எல்லை விஸ்தீரணம் குறைந்திருப்பதையும், மேச்சற்றுறையளவு குறைந்ததனால் வாய்தாகுறைக்கப் பட்டதையும் குறிப்பிடலாம். 1929-30 ம் வருஷத்தைப் போலவே பிரஸ்தாப வருஷத்திலும் பஞ்சாயத்தார்கள் கண்டு பிடித்திருக்கும் குற்றங்கள் அதிகரித்திருக்கின்றன. 1922-30-ல் 11,297 ரிபோர்ட்டாயிருந்தது. 1930-31-ல் 13,109. இவற்றில் 11,830 குற்றங்கள் ரூ. 86,694-க்கு ராஜிசெய்து மன்னிக்கப்பட்டுவிட்டன. முந்தி யவருஷம் 9,441 குற்றங்கள் ரூ. 80,796-க்கு ராஜிக்கு வந்திருக்கின்றன. குற்றவாளிகள் அதிகமாகப் பிடிபடுவதற்குக் காரணம் பஞ்சாயத்தார் இந்த வேலையில் காட்டி வரும் சிரத்தை யதிகமாயிருப்பதனுலென்று அனேக கலெக்டர்கள் அபிப்பிராயப்படுகின்றனர். பஞ்சாயத்தாரால் பிடிக்கப்படும் குற்றவாளிகள் செலுத்தும் அபராதம் ராஜித்தொகையில் அந்தப் பஞ்சாயத்துகளுக்குப் பாதிப்பணத்தில் ஒரு பாகம் கொடுக்கப்படுமென்று பிறப்பித்த உத்தரவின் பயனாக இந்த ஊக்கம் ஏற்பட்டிருப்பதாக அவர்கள் எண்ணுகிறார்கள். அந்த அபிப்பிராயம் சரியென்றே ரெவினியூ போர்டார் மதிக்கின்றனர். வன சட்டப்பிரகாரம் கடப்பை ஜில்லாவில் ஒரு பஞ்சாயத்து இவ் வருஷம் புதியதாக ஸ்தாபிக்கப்பட்டது. வடஆற்காடு ஜில்லாவில் இருபஞ்சாயத்துகள் தங்களதிகாரத்தை கிரமமாகவும் நியாயமற்றவழியிலும் செலுத்தியதனால் இவை இரண்டினதிகாரமும் பிடுங்கப்பட்டுவிட்டன. இதே ஜில்லாவில் மற்று மிரண்டு பஞ்சாயத்தில் மெம்பர்கள் விலகிக்கொண்டுவிட்டனர். அவர்களுக்குப் பதிலாக வந்திருப்பவர்களுக்கு இன்னும் அதிகாரமளிக்கப்படவில்லை. நாளது தேதியில் சட்டபூர்வமான பாத்யதைகளை யனுபவித்துவரும் பஞ்சாயத்துகள் 29. இவற்றில் பெரும்பாலனவை கிரமமாகவும் நியாயமாகவும அதிகாரம்

செலுத்துவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அவற்றில் சிலமாத்திரம் (திருச்சியி லிருக்கும் 5 பஞ்சாயத்தில் மூன்றும், குண்டூரிலுள்ள இரண்டில் ஒரு பஞ்சாயத் தும்) இந்த வருஷத்தில் குற்றம் ஒன்றையும் கண்டுபிடிக்காததனால் அவற்றிற்கேற் பட்டுள்ள அதிகாரத்தை உபயோகிக்க சந்தர்ப்பமேற்படவில்லை.

மொத்தம் 994 பஞ்சாயத்துகளில் 133 அதாவது 100-க்கு 13 பஞ்சாயத்து கள் வேலை நன்றாயிருப்பதாகவும் 559 அல்லது 100-க்கு 56 சுமாராகவும், 99 அல் லது 100-க்கு 10 சீர்பட்டு வருவதாகவும், 203 அல்லது 100-க்கு 20 ஒருமாதிரி யாகவும் வேலை செய்வதாக கலெக்டர்கள் எழுதியிருக்கிறார்கள் சென்ற வருஷம் 100-க்கு 13 நன்றாயிருந்ததென்றும், 100-க்கு 56 சுமாராயிருந்ததாகவும், 100-க்கு 12 சீர்பட்டுவருவதாகவும், 100-க்கு 19 ஒரு மாதிரி யிருந்ததென்றும் ரிபோர்ட்டி லறிவிக்கப்பட்டது

பஞ்சாயத்து வேலைகள்.

இந்த ரிபோர்ட்டு குறிப்பிடும் வருஷத்தில் 370 பஞ்சாயத்துகள் தங்கள் கிரா மங்களில் ரூ. 27,907 செலவிட்டு புதிய கிணறுகளை வெட்டி பழைய கிணறுகளை மராமத்து செய்திருக்கிறார்கள் முந்திய வருஷம் இதே விஷயமாக 395 பஞ்சா யத்துகள் ரூ 31,433 செலவிட்டிருக்கின்றன. 124 பஞ்சாயத்துகள் இவ்வருஷத் தில் ரூ. 3,359 செலவிட்டு வண்டித்தடங்கள்போட்டு மதில் பாலங்கள் கட்டியிருக் கிறார்கள். முந்திய வருஷத்தில் 281 பஞ்சாயத்துகள் ரூ. 10,253 செலவு செய் தன. நாட்டில் தோன்றியுள்ள பொருளாதாரக் கஷ்டத்தினால் எதிர்பார்க்கப் பட்ட மேச்சற்றுறை வருமானம் பூராவாக கிடைக்காததனால்தான் பிரஸ்தாப வரு ஷத்தில் ஜல சப்ளை வேலை அதிகமாக நடைபெறவில்லையென்று கூறப்படுகிறது. இத்தா சீர்திருத்த இனங்களில் அதிகப்பணம் செலவாகாததற்குக் காரணம் சப்பாத் திக்காட்டை அழிக்க ஒருவகைப்பூச்சி கொண்டுவந்து விடப்பட்டிருப்பதே முக்கிய காரணம். சப்பாத்திக்காட்டை அழிக்க இதுவரை ஏராளமாகப்பணம் செலவாகி வந்தது. இந்த பூச்சி கொண்டுவரப்பட்டதனால் பணம் அதிகம் செலவிடவேண் டிய அவசியமில்லாமற் போய்விட்டது. இவ்விதமாக சப்பாத்திக்காட்டை அழிக் கும் வேலை முந்திய வருஷத்திய ரிபோர்ட்டில் கூறியவாறு அதிக மும்முரமாக மாக நடைபெறுகிறது. சப்பாத்தியழிக்கும் பூச்சியின் சுபாவத்தை நன்கறிந்து கொண்டபிறகு வனபஞ்சாயத்து டிப்டி தாவில்தாருகளுக்குத் தெரிவித்து வன பஞ்சாயத்தகிகாரி இப்பூச்சிகளை 44 பஞ்சாயத்துகளில்விட்டு இவ்வேலையைப் பரா மரித்து நேரில் வருகிறார். இப்பூச்சியைக்கொண்டு சப்பாத்திகளை அழிக்கும்வழி எல்லாப் பஞ்சாயத்துகாரர்களுக்கும் சொல்லிக்கொடுக்கப் பட்டிருக்கிறது. சப் பாத்திக்காடுகளிலிருக்கும் எல்லா பஞ்சாயத்து கிராமங்களிலும் சப்பாத்திகளை யழிக்கும் பூச்சியை வளர்க்க ஏற்பாடு செய்யுமாறு எல்லா வன பஞ்சாயத்து டிப்டி தாவில்தார்களுக்கும் போர்டு உத்தரவு பிறப்பித்தது. அதன் பிரகாரம் சப்பாத்தி யுள்ள எல்லா பஞ்சாயத்துகளிலும் சப்பாத்திபூச்சி விடப்பட்டிருக்கிறது. அப் பூச்சிகள் விருத்தியடைந்து பக்கத்து கிராமங்களுக்கும் சென்று எல்லா சப்பாத்திக் காட்டுகளையும் அழித்து வருகின்றன.

இதுகாறும் ஆவாரம் விதை உழவு காலத்தில் மாத்திரம் கொஞ்ச விடங்களில் விதைக்கப்பட்டு வந்தது. இப்பொழுது மழைத்தூறல ஏற்பட்ட அடியோடு ரிஸர்வ் காடுகளில் எவ்வளவு தூரம் முடியுமோ அவ்வளவிலும் ஆவாரம் விதைகள் தெளிக்கப் படுகின்றன. இதனுல் போதிய மழை பெய்திருக்குமிடங்களில் செடிகள் ஏராள மாக மண்டிவிடுகின்றன. பஞ்சாயத்தார்களும் மரங்கள் வளர்வதைப் பாதுகாப்ப தில் இதுவரையில் காணப்படாதவாரு சிரத்தை காட்டி வருவதாகத் தெரிகிறது. 1931-ம் வருஷம் ஜூன் மாதம் 30௳ உயிரோடிருந்த மரங்கள் 81,186. முந்தின வருஷத்தில் 75,496.

இந்த வருஷத்தில் நில வரிக் கமிஷனர் 60 பஞ்சாயத்துகளைப் பார்வையிட் டிருக்கிருர். சென்ற வருஷம் அவர் பார்வையிட்ட பஞ்சாயத்துகள் 52. 18 ஜில் லாக்களில் கலெக்டர்கள் பரீக்ஷித்த பஞ்சாயத்துகள் 169. ரெவினியூ டிவிஷனல் ஆபீஸர்கள் பார்த்த பஞ்சாயத்துகள் 771. இவர்கள் வழக்கமாக ஆழ்ந்து பார்வை யிட்டு வேலை நடப்பதை கவனித்து வந்திருக்கிருர்கள். வனப் பஞ்சாயத்து அதி காரி 167 பஞ்சாயத்துகளைப் போய் பார்வையிட்டிருக்கிருர். சென்ற வருஷத்தில் இவர் பார்வையிட்ட பஞ்சாயத்துகள் 163. டிபுடி பஞ்சாயத்து தாஸில்தார்கள் போதிய அளவு சுற்றுப் பிரயாணம் செய்திருக்கிருர்கள்.

காடு காவற்காரர்கள் தங்களுடைய வருமானத்தை பெருக்கிக்கொள்ளவும், அதன் மூலம் காடு காவலில் சிரத்தை யதிகம் காட்டவும் தூண்டுதலாக அவர்க ளிஷ்டப்படி குறுவைப் பயிரிட நிலம் கொடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின் றன. இந்த வசதியைக் கைக்கொள்ள பிரஸ்தாப வருஷத்தில் அதிகமாக எவரும் முன் வரவில்லை. கடப்பை ஜில்லாவிலிருவரும் திருச்சி ஜில்லாவிலொருவரும் வட ஆற்காடு ஜில்லாவில் ஒருவருமாக மொத்தம் 5 காவல்காரர் மாத்திரம் இந்த ஏற்பாட் டில் நிலம் பெற்றுக்கொண்டார்கள். இவ்வாறு அனேகம் பேர்களுக்கு நிலம் கொடுத்து வியாபாரமாக்குமாறு கலெக்டர்கள் கேட்டுக்கொள்ளப்படுவார்கள்.

வருஷ ஆரம்பத்தில் 26 பஞ்சாயத்து டிபுடி தாஸில்தார்களிருந்தனர். அப் பால் நெல்லூருக்கொருவரும், வட ஆற்காடு ஜில்லாவிற்கொருவருமாக ஆக யிருவர் அதிகம் மே மாதம் முதல் தேதி முதல் நியமிக்கப்பட்டனர். பிறகு சிக்கனத்தை யுத்தேசித்து இவர்கள் நீக்கப்பட்டனர். பொதுவாக இந்த மாகாண முழுவதும் பஞ்சாயத்துகள் திருப்திகரமாக வேலை செய்திருப்பதாக போர்டு தெரிவித்துக் கொள்ளுகிறது.

முனிசிபல் சபைகள், லோகல் போர்டுகள் இன்ஸ்பெக்டரின் அறிக்கை.

மவுண்ட் ரோட், மதராஸ்.

10-9-1931-ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு நெம்பர் D. Dis 23,455.

மதராஸ் லோகல்போர்டு புதிய சட்டப்பிரகாரம் ஏற்படுத்தப்படும் பஞ்சாயத்துகளுக்கு தேர்தல் நடத்துவதைப்பற்றி 3-2-1931-ல் இந்தக் காரியாலயத்திலிருந்து தாலுகா போர்டு பிரஸிடெண்டுகள், கௌரவ ஸ்தாபகர்கள் முதலிய சிலருக்கு 27993-C. I. நம்பர் சுற்றறிக்கை 3-2-1931-ல் அனுப்பப்பட்டது. அந்த அறிக்கையின் 2 வது பாராவில் தேர்தல்கள் 1920-ம் வருஷத்திய பழைய சட்டத்தின்கீழ் தயாரிக்கப்பட்ட விதிகளைக்கொண்டு நடத்த அவர்களுக் கதிகாரமளிக்கப்பட்டது. அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்துகளை அமைக்க உத்தரவு கோரி கௌரவ ஸ்தாபகர்கள், தாலுகா போர்டு பிரஸிடெண்டுகளிடமிருந்த ரிபோர்ட்டுகள் கிடைத்திருக்கின்றன. ரத்து செய்யப்பட்ட சட்டத்தைக்கொண்டு தயாரிக்கப்பட்ட விதிகள் வாக்காளர் ஜாப்தாவின்பிரகாரம் நடைபெறும் தேர்தல்கள் ஒழுங்காகுமா என்று சந்தேகம் தோன்றியிருப்பதனால் புதிய சட்டத்தைக் கொண்டு தேர்தல் விதிகள் வாக்காளர் ஜாபிதா முதலியன தயாராகும் வரை அவற்றின்மேல் உத்தரவு பிறப்பிப்பது நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது.

2. மதராஸ் ஸ்தலஸ்தாபன சட்டத்தின்கீழ் புதியதாக ஏற்படும் லோகல் போர்டின் வேலையை நடத்த ஒரு ஸ்பெஷல் அதிகாரி நியமிக்கப்பட வேண்டுமென்று அச்சட்டம் 20-வது பிரிவு 1-வது உபவிதி குறிப்பிடுகிறது. இவ்விதமாக நியமிக்கப்படும் அதிகாரி அந்த லோகல்போர்டு அதன் தலைவர் யாவருக்குமுள்ள அதிகாரத்தை வகிப்பார். இதைக்கொண்டு இந்த சட்டம் 5-வது விதியின்கீழ் ஏற்படும் ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் ஒவ்வொரு கௌர அதிகாரியை நியமிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இவ்விதம் நியமிக்கப்பட்டு 6 மாதங்களுக்குள் தேர்தல்களை நடத்த ஏற்பாடுகள் செய்யப்படும்.

3. பஞ்சாயத்துகளை அமைக்குமாறு கேட்டுக்கொண்டு இக் காரியாலயத்திற்கு ரிபோர்ட்டுகள் அனுப்பியுள்ள கிராமங்களின் ஜாபிதா இத்துடன் சேர்க்கப்பட்டிருக்கிறது. இந்த ரிபோர்ட்டுகளை யனுப்பியிருக்கும் தாலுகா போர்டு பிரசிடெண்டுகள், கௌரவ ஸ்தாபகர்கள் யாவரும் தாங்கள் உத்தேசிக்கும் பஞ்சாயத்துகளை ஸ்பெஷல் அதிகாரிகளாக நிர்வகிக்கத்தக்க யோக்கியதை யுள்ளவர்கள் பெயரை சிபார்சு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றனர். கௌரவ ஸ்தாபகர்கள் சிபார்சு செய்யும் பெயர்கள் தாலுகாபோர்டு தலைவர் ரெவினியூ டிவிஷனல் ஆபீஸர்கள் துவாராகவும், தாலுகாபோர்டு தலைவர்கள் சிபார்சுகள் அந்தந்த ரெவினியூ டிவிஷனல் ஆபீஸர்கள் மூலமாகவும் அனுப்பப்படவேண்டும். சிபார்சு செய்யப்படுபவர்கள் அந்தந்த ஸ்தலத்திலிருப்பவர்கள் யாவராலும் மதிக்கப்படுபவராகவும் பூரணமாக நம்பத்தகுந்தவராகவும் இருக்கவேண்டும்.

4. இனிமேல் அனுப்பப்படும் புதிய பஞ்சாயத்துகளமைப்பு ரிப்போர்ட்டுகளில் அந்தந்த பஞ்சாயத்திற்கு 240 (1)-வது விதிப்பிரகாரம் நியமிக்கப்படக்கூடிய ஸ்பெஷல் அதிகாரி பதவிக்கேற்றவர் பெயரும் குறிப்பிடப்படவேண்டும்.

5. இந்த ஸ்பெஷல் ஆபீஸர்களின் வேலைகள் விவரத்தைப்பற்றித் தனி உத்தரவுகள் பிறப்பிக்கப்படும்.

ஸ்பெஷல் அதிகாரிகளின் வேலைப் பொறுப்பு.

முனிஸிபல் சபைகள், லோகல் போர்டுகள் இன்ஸ்பெக்டரின் அறிக்கை.

6-10-31-ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு நெம்பர் D. Dis. 30937.

ம-ா-ா-ஸ்ரீ ராவ் பகதூர் என். கோபாலசாமி அய்யங்கார் அவர்கள், B.A., B.L., முன்பாக.

விஷயம்.—ஸ்பெஷல் ஆபீஸர்கள் விதிகள்.

உத்தரவு.—மதராஸ் லோகல் போர்டுகள் திருத்தச் சட்டம் 249-வது விதி (1)-வது பிரிவின் கீழ் நியமிக்கப்பட்டிருக்கும் அதிகாரிகள் பின் பற்றுவதற்காக பின் வரும் விதிகள் வெளியிடப்பட்டிருக்கின்றன.

2. பஞ்சாயத்து போர்டு ஏற்பட்டு அதற்குத் தலைவர் தேர்ந்தெடுக்கப்படும் வரை அந்த போர்டினுடையவும் அதன் தலைவருடையவும் அதிகாரங்களைச் செலுத்தி வேலைகளைக் கடமைகளையும் செய்ய 240 (3)-வது பிரிவு அதிகாரமளிக்கிறது. ஆகையினால் ஸ்பெஷல் ஆபீஸர்கள் பஞ்சாயத்துகளுக்கேற்பட்டுள்ள கணக்குகள் தாக்கீதுகள் யாவற்றையும் சரிவர எழுதி வரவேண்டியது அவசியமாகிறது. இதற்கான விவரங்கள் புஸ்தகங்கள் யாவும் ஒரு பூரா ஸெட்டு ரூ. 6-4-0 வீதம் சென்னை ஹோம் அண்டு கோவிலிருந்து வாங்கிக்கொள்ளலாம். ஸ்பெஷல் ஆபீஸர் தாம் செய்யும் காரியங்கள் யாவற்றையும் மினிட்ஸ் புஸ்தகத்தில் எழுதி வைக்கவேண்டும். இந்த குறிப்பின் பிரதி ஒன்று அந்தந்த தாலுக்கா போர்டு தலைவருக்கு எழுதப்பட்ட 3 தினங்களுக்குள் அனுப்பப்படவேண்டும்.

3. ஸ்பெஷல் ஆபீஸர் அச்சட்டம் 75 (2) (*a*) பிரிவின் கீழ் இன்ஸ்பெக்டரின் அனுமதி பெற்று பஞ்சாயத்தின் சார்பாக அக்கிராமத்தில் வரி விதித்து நிதி சேர்க்கக்கூடும். வரி விதிக்க யோசனை செய்திருப்பதைப்பற்றிய திட்டங்களை இன்ஸ்பெக்டரின் அனுமதி கோர அனுப்புமுன் ஒவ்வொரு ஸ்பெஷல் ஆபீஸரும் கிராம வாசிகளின் யோசனையைத் தவறாது கேட்டறிந்துகொள்ளவேண்டும். திட்டமும் அதிகக் கவனமாக தயாரிக்கப்படவேண்டும். கிராமத்திலும் பெரும்பாலோர் அந்த வரியை ஆதரிக்கிறார்களென்று நம்பிக்கை ஏற்பட்டாலல்லது வரி விதிக்க இன்ஸ்பெக்டர் அனுமதி கொடுக்கமாட்டார். இத்தகைய திட்டங்களை யனுப்புவதில் ஸ்பெஷல் ஆபீஸர் அனுஷ்டிக்கவேண்டிய முறைகள் வருமாறு.

1. அந்த கிராமத்தில் சுலபமாக வசூலாகக்கூடிய வரி விவர ஜாபிதா ஒன்று முதலில் தயாரிக்கவேண்டும். போதிய முன்னறிக்கை வெளியிட்டு எல்லாக் கிராம வாசிகளையும் கூட்டமாகக் கூட்டி தாம் செய்துள்ள யோசனைகளை யவர்களிடம் கூறவேண்டும்.

2. அந்தக்கூட்டத்தில் ஒப்புக்கொள்ளப்பட்ட ஜாபிதாவை கிராமத்தில் பின் வருமாறு பறை சாற்றவேண்டும். (1) அந்த ஜாபிதாவை கிராமத்தில் ஜனங்கள்

அதிகமாக அடிக்கடி பழகுமிடங்களில் ஒட்டவேண்டும். (2) கூட்டத்தில் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ள வரிகளை ஆட்சேபிப்பவர்கள் தங்கள் ஆட்சேபனைகளை அறிவிக்க வேண்டுமென்று பறையடித்து அழைக்கவேண்டும். 15 நாட்களுக்குள் ஆட்சேபனையை தெரிவிக்க சாவகாசமளிக்கவேண்டும். ஆட்சேபனைகள் அப்பால் எந்தத் தேதியில் யோசிக்கப்படும் என்னும் விஷயம் தெளிவாக குறிப்பிட்டு நோட்டீஸ் அனுப்பவேண்டும்.

3. அந்த நோட்டீஸில் குறிப்பிட்ட தேதியன்று ஸ்பெஷல் ஆபீஸர் கிராம வாசிகளின் மற்றோர் கூட்டத்தைக் கூட்டி தமக்கு கிடைத்துள்ள ஆட்சேபனைகளை அதற்கேற்ற சமாதானங்களையும் தெரிவிக்கவேண்டும். அந்தக்கூட்டத்தில் பொதுவாக வரி விதிக்கும் யோசனை எவ்விதமாறுதலுடன் முடிவுசெய்யப்பட்டாலும் அதன் பிரகாரம் திட்டம் தயாரிக்கவேண்டும். இவ்விஷயம் மினிட் புஸ்தகத்தில் பதிவு செய்யப்படவேண்டும்.

4. இவ்விதம் பதிவான விஷயத்தை மேலெடுத்து மேற்குறிப்பிடப்பட்ட இரண்டு கூட்டங்களின் நடவடிக்கை விவரங்களுடன் பின்வரும் விவரங்களடங்கிய ஒரு ஸ்டேட்மெண்டையும் தயாரித்து இவற்றை கௌரவ ஸ்தாபகர் அல்லது தாலுகா போர்டு தலைவர்மூலம் அனுப்பவேண்டும்.

யோசனைகள் முதல் கவனிக்கப்பட்ட கிராம வாசிகளின் கூட்டம் நடைபெற்ற தேதிகள்.	ஆட்சேபனைகள் அறிவிக்க தேதி குறிப்பிட்ட நோட்டீஸ்கள் பிறப்பிக்கப் பட்ட தின தேதி.	கிராம வாசிகளால் முடிவாக யோசனை அங்கீகரிக்கப்பட்ட கூட்டம் கூடிய தேதி.

4. ஸ்பெஷல் ஆபீஸர் பின் வரும் விஷயங்களையு மனுப்பலாம்.

1. பஞ்சாயத்து எல்லைக்குள் பிரயாண வசதிகள், ஜல வசதிகள் செய்து கொடுக்கவும், பள்ளிக்கூடங்களில்லாத விடங்களில் பஞ்சாயத்து பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தவும் கோரும் கிராண்டுகளுக்கு மனு.
2. மராமத்து இலாகா ஆதீனத்திற்குட்பட்ட வாய்க்கால்கள், மடவாய் புறம்போக்குகள் ஓரங்களிலிருக்கும் மரங்களின் கனிகளையும், புற்களையும் வெட்டிக்கொள்ளும் பாத்தியதை குத்தகையும், மராமத்து இலாகாவிற்குட்பட்ட வாய்க்கால்கள், கால்வாய்கள், குளங்களில் மீன் பிடிக்கும் பாத்தியக் குத்தகையையும் எடுக்க மராமத்திலாகாவிற்கு அனுப்பப்படும் மனுக்கள்.

கிராண்டின் எய்டு மனுக்கள் அந்தப் பஞ்சாயத்துகளிடமிருந்து நேராகக் கிடைத்தால் எவ்வாறு பைசல் செய்யப்படுமோ அவ்

வாறு தான் செய்யப்படும். சாதாரணமாகப் பஞ்சாயத்துகளுக்கு விதிக்கப்படும் நிபந்தனைகளுக்குட்பட்டு விநியோகிப்பதற்குக் கைபடும். வசமுள்ள பணத்தைப்பொருத்தே இவை பைசல் செய்யப் புல் வெட்டுவது மீன் பிடிக்கும் உரிமைகளைக் கோரி கொடுக்கப் படும் மனுக்கள் நிர்வாக இஞ்சினியர் விலாசம் எழுதி அனுப்பப் படவேண்டும். ஸ்பெஷல் அதிகாரியை நியமித்து இந்தக் காரியாலயத்திலிருந்து அனுப்பப்பட்டிருக்கும் உத்தரவின் நகலும் அத்துடன் சேர்த்தனுப்பப்படவேண்டும்.

5. ஸ்பெஷல் ஆபீஸர் நியமிக்கப்பட்ட 6 மாதங்களுக்குள் தேர்தலை நடத்தி பஞ்சாயத்தார் வேலை செய்வதற்காகத் தேர்தலை நடத்த 240-வது பிரிவு 2-வது விதிப்பிரகாரம் ஸ்பெஷல் ஆபீஸர் ஏற்பாடுகள் செய்யவேண்டும். பஞ்சாயத்தேற்பட்ட 6 மாதங்களுக்குள் தேர்தலை நடத்தி வைக்குமாறு ஸ்பெஷல் ஆபீஸர் தேர்தலதிகாரியாகிய இன்ஸ்பெக்டருக்கு எழுதவேண்டும். அந்தப் பஞ்சாயத்தின் வழிப் பிரகாரம் ஒரு வாக்காளர் ஜாபிதா தயாரிக்கவும், அவர் ஜில்லா தேர்தலதிகாரிக்கு கடிதம் எழுதவேண்டும்.

6. ஸ்பெஷல் அதிகாரிகள் தங்கள் கடமையை சரிவரச் செலுத்துவதற்கான வழியில் பஞ்சாயத்து கௌரவ ஸ்தாபகர்களும் தாலுக்கா போர்டு தலைவர்களும் உதவி புரியுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

——

கேரளச் சந்தன சோப்பை வாங்குங்கள்.

ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு வீட்டிலும் சுகத்தையும் ஆனந்தத்தையுமளிக்கும் சோப்பு இதுவே.

கோடையில் குளிமையையும் பரிமளத்தையும் கொடுக்கும் வெகு சிறந்த சோப்பும் இதுவே.

கேரள சோப்பு இன்ஸ்டியூட்,
கள்ளிக்கோட்டை.

18 DEC 1931

அடக்கம்.

பக்கம்.

1. 1930-31-ம் வருஷத்திய நமது வர்த்தகம் 21
2. பத்திராதிபரின் குறிப்புகள் 26
3. வங்காளத்தில் கிராமப் புனருத்தாரண வேலை 27
4. பஞ்சாயத்துகளின் தற்கால நிலைமை—(ஸ்ரீமான் ஜே. குப்புசாமி சௌத்ரீ) 29
5. கிராம அபிவிருத்தி நிதி—(ஸ்ரீமான் என். கோபாலசாமி அய்யங்கார் பிரசங்கம்) 30
6. இந்தியா வறுமையுற்றிருப்பதேன்?—("கலக இந்தியா" வில் மிஸ்டர் பிரெயில்ஸ்போர்டு எழுதுவது) 31
7. இந்தியாவில் சக்கரை அபிவிருத்தி... 33
8. கதம்பம் 34
9. அதிகாரத்தைச் செலுத்த இஷ்டப்படாதது குற்றமாகாது ... 37
10. ரோடு அபிவிருத்தி 37
11. தென் ஆற்காடு ஜில்லா கள்ளக்குறிச்சி தாலூக்கா பாக்கம் பஞ்சாயத்து பிரசிடெண்டு வெ அப்பாவு நாயுடு தெரிவிப்பதாவது 40

பொது விளம்பரம்.

தாலூக்கா போர்டுத்தலைவர்களுக்கும் பஞ்சாயத்தார்களுக்கும் ஓர் வேண்டுகோள் பஞ்சாயத்து சம்மந்தமாயுள்ள பிரசுரஞ் செய்யக்கூடிய முக்கியமாயுள்ள விஷயங்களைப் பஞ்சாயத்துச் சஞ்சிகைக்கு நீங்கள் அனுப்பும்பக்ஷத்தில் அவைகள் சஞ்சிகையில் பிரசுரஞ்செய்யப்படும். காட்டு இலாகா பஞ்சாயத்து, நீர்ப்பாய்ச்சல் பஞ்சாயத்து, கூட்டுறவுப் பஞ்சாயத்து, பஞ்சாயத்துக் கோர்ட்டுகள், மற்றுமுள்ள சங்கங்கள் தங்கள் நடவடிக்கையில் விசேஷமாயுள்ளவைகளை இச்சஞ்சிகையில் பிரசுரஞ்செய்யுமாறு அனுப்பலாம். அவ்விதம் அனுப்பப்படும் நிருபங்கள் சுருக்கமாகவும், தெளிவாகவுமிருத்தல்வேண்டும். கொஞ்சமிடத்தில் பல விஷயங்களை அப்போதுதான் வெளியிடமுடியும்.

நம் சஞ்சிகையை வாசிப்போருக்கு இச்சஞ்சிகையின் க்ஷேமத்தைக் குறித்து உங்களுக்குத் தோன்றும் அபிப்பிராயங்களை நமக்குத் தெரிவிக்கக் கேட்டுக்கொள்ளுகிறோம். பஞ்சாயத்து, அதன் முற்போக்கை நாடியுமுள்ள விஷயங்கள் கிராமச் செழிப்பிற்கு ஏதுவாயுள்ள விஷயங்கள் இவைபோன்றவை சம்மந்தப்பட்ட நிருபங்களை நாம் பிரசுரிக்கத் தயாராயிருக்கிறோம். ஆனால் நிருபங்கள் கடிதாசியின் ஒரு பக்கத்திலேயே எழுதியிருக்கவேண்டும்; சுருக்கமாயும் தெளிவாயுமிருக்கவேண்டும்.

விஷயதானம் செய்கிறவர்கள் தாம் எழுதும் விஷயங்கள் எந்தெந்த பாஷையில் வெளிவரவேண்டுமென்று விரும்புகின்றார்களோ அந்தந்த பாஷையிலேயே எழுதியனுப்புமாறு வேண்டிக்கொள்கிறோம்.